Tamil Short Story - Honourable Mention

மலர்விழி இளங்கோவன் (Malarvizhi Elangovan)

தீர்ப்பு நாள் 01-01-2100 (Judgement day 01-01-2100)

# தீர்ப்புநாள் 01-01- 2100

பாஒம மகுதீஆ- ஏதோ ஜப்பானிய மொழி போல் ஒலிக்கும் இது தான் இப்பொழுது காற்றிடை பரவும் தொற்று நோய் போல் உலக மகளிரை ஒருசேர ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.

சமூக வலைத்தளங்களில் இது பற்றிய செய்தியை நாளும் ஆவலுடன் படித்தனர். ஒவ்வொரு பெண்ணின் நெஞ்சுக்குள்ளும் பரவசம் இதயத் துடிப்புகளை அதிகரித்தப் படியே இருந்தது. இதோ இன்னும் ஒரே ஒரு மாதம் தான். 01-01- 2100 வருவதற்கு. கவுண்ட் டவுன் ஆரம்பித்து விட்டார்கள் பெண்கள். எத்தனை ஆண்டு காலக் காத்திருப்பு. ஆண்டுகள் என்று சொல்வதை விட, ஒரு நூற்றாண்டுக்காத்திருப்பு என்பதே சரியானது. இந்த மனு சென்ற நூற்றாண்டில், அதாவது, 01-01- 2000ல் கொடுக்கப்பட்டு வாத விவாதங்களுக்குப் பிறகு இடைக்கால அவகாசமாய் ஒரு நூற்றாண்டு கொடுக்கப்பட்டு இதோ, இறுதித் தீர்ப்புக்கான அந்த நாளும் நெருங்கி விட்டது.

அந்த இறுதி தீர்ப்புக்காகத் தான் ஆவலோடு காத்திருக்கிறது பெண்ணினமே. இது சென்ற நூற்றாண்டுப் பெண்கள் தங்கள் இனத்திற்காக முன்னெடுத்த உரிமைப் போராட்டம். இப் போராட்டம் அதற்கு முந்தைய நூற்றாண்டுகளாகவே சிறிது சிறிதாக நடந்திருந்தாலும் புரட்சிப் போராட்டமாக உருவெடுத்தது பிந்தைய காலங்களில் தான்.

பெண்களின் எதிர்ப்பார்ப்பும், உற்சாகமும், பரபரப்பு மின்னியல் பரிமாற்றங்களும், ஆண்களின் கலக்கத்தை அதிகரித்துக் கொண்டிருந்தது. என்னவென்று முழுமையாய்த் தெரிந்துக்கொள்ள முடியாவிடினும், பெண்கள் தங்களுக்கு எதிராய் ஏதோ ஒரு வியூகம் வகுத்து நெருங்கிவிட்டதாக தெரிந்தது அவர்களுக்கு. இருப்பினும் யுகம் யுகமாய்த் தங்களை எதுவும் செய்ய முடியாத பெண்ணினம் இப்பொழுது மட்டும் பெரிதாய் என்ன செய்து விட முடியும் என்ற வழக்கமான இறுமாப்பும் சேர்ந்தே இருந்தது.

பாஒம மகுதீஆ பற்றி உங்களுக்கு என்னவென்று விளக்கவே இல்லையே! அது தான் பாலின ஒழுங்கு முறை மற்றும் மக்கள் குறை தீர்ப்பு ஆணையம். பாஒம மகுதீஆ என்று ஒரு மந்திரச் சொல் போல் உச்சரித்துக் கொண்டு அதன் இறுதி தீர்ப்புக்காகத் தான் காத்துக் கிடக்கிறார்கள் அனைத்துலகப் பெண்களும்.

காலம் காலமாய் பெண்கள் தங்கள் வாதங்களையும், நியாயங்களையும் ஆணையத்தின் முன் வைத்து விட்டனர். பெண்கள் வைத்த வாதங்கள் ஆண் வர்க்கத்தைத் திகைக்கவே வைத்து விட்டது. ஆம்... மகளிர் தங்கள் தரப்பை வலிமைப் படுத்த எடுத்துக் காட்டிய உதாரணங்கள் அவ்வளவு வலு மிகுந்த சான்றுகள் மட்டுமல்ல, வலி மிகுந்த சான்றுகளும் கூட.

மலர்விழி இளங்கோவன் (Malarvizhi Elangovan)

தீர்ப்பு நாள் 01-01-2100 (Judgement day 01-01-2100)

இருபதாம் நூற்றண்டுகள் வரை கொண்டாடப்பட்ட காளை மாடுகளின் நிலை இருபத்தியோராம் நூற்றாண்டு தொடக்கத்திலேயே எப்படி தலைகீழாய் மாறிவிட்டதென அவர்கள் எடுத்துரைத்த போது ஆணையத்தின் தலைவரே வாயடைத்துப் போனது உண்மை.

அப்படி என்ன தான் அவர்கள் சொன்னார்கள் என்பது தானே உங்களுக்குத் தெரிய வேண்டும்.

உலக நாடுகள் கிராமங்களாய் நிறைந்திருந்தபோது வீடுகள் அனைத்திலும் தொழுவங்கள் நிறைந்திருந்தன. பசுக்கள் பால் கொடுப்பதும், இனம் பெருக்குவதுமாய் தங்கள் பணியை, செய்ய, காளை மாடுகள் உழவுத் தொழில், வண்டி இழுத்தல் என்று தங்கள் பணியைச் செய்தன. கிராமங்கள் தொலைந்தன, விவசாயம் நலிந்தது, மோட்டார் வாகனங்கள் பெருகின. காளை மாடுகளின் தேவை குறைந்து போனது. பசுக்கள் கருத்தரிக்கவும் சினை ஊசி போடும் காலம் வந்தது. பாவம்... அதற்கும் காளைகளின் தேவையற்றுப் போனது.அவற்றை வைத்துக் கொண்டு மனிதர்கள் என்ன தான் செய்வார்கள்? அவிழ்த்து விரட்டப் பட்ட காளைகள் தேடுவாரின்றி பசை ஒட்டிய தாள்களைத் தின்று நெடுஞ்சாலைகளில் அலைந்து திரிந்தன.

பாஒம மகுதீஆ தலைவருக்கு இதோ நெஞ்சை அடைத்தது. அவரும் ஆணினத்தின் பிரதிநிதி அல்லவா! தன் இறுகிப் போன முகத்தில் வழிந்தோடிய வியர்வையை அழுந்தத் துடைத்து, மூச்சை இழுத்து விட்டு தன்னை ஆசுவாசப் படுத்திக் கொள்ள முயன்றார்.

இப்பொழுது என்ன தான் சொல்ல வருகிறீர்கள்? என்ற அவரிடம் ஒரு புன்முறுவலுடன் தொடர்ந்தனர் பெண்களின் பிரதிநிதிகள்.வேட்டையாடிய கற்கால ஆண்கள், விவசாயம், தொழில்துறையென்று பரிணாம வளர்ச்சி அடைந்தனர். ஈன்று புறந்தருதல் எந்தலைக்கடனே என்று தன் கடமை செய்து குடும்பம் பேணிய பெண்கள் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என சரி நிகர் சமானமாய் கல்வி கற்றாள். தன்னால் எதுவும் முடியுமென தன்னை மேம்படுத்திக்கொண்டாள். வெளியிலும் வேலைக்குச் சென்று பொருளீட்டினாள்.

ஆனால் சென்ற நூற்றாண்டு போலவே பொருளை மட்டுமே ஈட்டிக் கொண்டிருந்த ஆணினம் எங்களைத் தங்களின் கைப்பாவையாகவே இன்று வரை எண்ணுகிறது. வரதட்சனை, சபலம், சந்தேகம், துரோகம், வன்முறை எனத் தொடர்ந்தன ஆணினத்தின் கொடுமைகள். காலம் காலமாய் பெட்டைப் புலம்பல்கள் என உலகமே அறிந்த கதை தானே, இதை இன்னும் விளக்க என்ன இருக்கிறது என்றபோது இவ்வளவு நேரம் பொறி பறந்த பேச்சில் ஒரு ஆதங்கம் அடியோடியது.

ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்த பெண்கள் பிரதிநிதிகள், எங்களின் இந்தப் பெருமூச்சுகள் கடந்த காலங்களோடு முடியட்டும். பெண்கள் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டோம். இந்த ஆண்களே எங்களுக்கு வேண்டாம் என்ற பெண்கள் தரப்பை அதிர்ச்சியுடன் ஏறெடுத்த ஆணையத்தின் தலைவர், தங்களிடமும் சரியான வாதங்கள் இருப்பதாய் எண்ணிய படி ஆண்களின் தரப்பை முன் வைக்க தொடங்கினார்.

Tamil Short Story - Honourable Mention

மலர்விழி இளங்கோவன் (Malarvizhi Elangovan)

தீர்ப்பு நாள் 01-01-2100 (Judgement day 01-01-2100)

உங்கள் கூற்றுகளில் உண்மை இருக்கலாம். ஆனால் இரண்டாயிரம் வருடம் பழக்கங்களை ஒரேயடியாய் ஆண்களால் மாற்றிக்கொள்ள முடியாது என்பதையும் நீங்கள் புரிந்துக்கொள்ள வேண்டும் என்றார். அதிலுள்ள நியாயத்தை ஏற்றுக் கொண்ட பெண்கள், நீங்கள் சொல்வதை நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். இன்னும் ஒரு நூற்றாண்டு கால அவகாசம் கூட எடுத்துக்கொள்ளட்டும். இரண்டாயிரம் ஆண்டுகளாய் பெண்களை வேலைக்கு அனுப்பாத ஆண்கள் இன்று அதை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியும்போது தங்களை மாற்றிக் கொள்ளவும் முடியும் தானே என்ற விவாதங்களோடு தீர்ப்புக்காக ஒரு நூற்றாண்டு காத்திருப்பதாக ஒப்புதல் கொடுத்தது பெண்கள் தரப்பு. இதோ, ஆண்டுகள் உருண்டோட அந்த நாளும் வந்து சேர்ந்தது இருபத்து இரண்டாம் நூற்றாண்டின் முதல் நாளாக.

ஆண்களும் எவ்வளவோ தங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மனைவிக்கு உதவுகிறார்கள். பிள்ளைகளை கவனிக்கிறார்கள். பெண்களுக்கு போதிய சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள் என்று ஆணயத் தலைவர் வாய் மூடுவதற்குள் பெண்கள் தரப்பு எகிறியது. பொறுத்தது போதும் என பொங்கி எழுந்தது.இருபத்து இரண்டாம் நூற்றாண்டே வந்தாலும் இந்த ஆண்கள் மன நிலையில் மாற்றம் வரப் போவதே இல்லை. அதே பழைய பல்லவி.

இதை தான் நாங்கள் வண்மையாக கண்டிக்கிறோம்.பிள்ளைகளென்றால் இருவருக்கும் பொது தானே. அது என்ன மனைவிக்கு உதவுகிறார்கள் எனும் போதே பெண்கள் தரப்பில் சூடு ஏறியிருந்தது. நாங்கள் செய்வது கடமை... அவர்கள் செய்தால் உதவியா? எங்களின் சுதந்திரம் இவர்கள் கொடுப்பதாய் இருப்பது தான் அடிமைத்தனத்தின் ஆணி வேரே.

ஏதோ சொல்ல முயன்ற தலைவரை முந்திக்கொண்டு, இன்றைய பெண்கள் என்ன அந்தக்காலப் பெண்கள் போலவா இருக்கிறார்கள்? ஆண் செய்யும் அத்தனைத் தவறுகளையும் பெண்களும் தானே செய்கிறார்கள் என பட்டியலிடத் தானே வருகிறீர்கள்.மறுப்பதற்கில்லை. ஆணுக்கெதிராய் தன் எதிர்ப்புகளைக் காட்டத் துவங்கிய பெண்கள், தனக்கான கேடயங்களையே ஆணுக்கெதிரான ஆயுதங்களாய் பயன்படுத்தத் துவங்கியிருப்பது தான் எம் இனத்தையுமே கலவரப்படுத்தத் துவங்கியிருக்கிறது.தனித்து வாழ்தல், தாய்மையைத் தவிர்த்தல்,கலாச்சாரமுறைகேடுகள் என மாறிவரும் பெண்களின் போக்கு இன்னும் அதிகரித்து, அது தொடருமானால் அது இன்னும் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும். உலகம் அழிந்து போவதற்கு வேறு ஏதும் பிரளயங்கள் வராமலேயே அது நடந்து விடும்.விகிதாச்சார அடிப்படையில் இப்போக்கு குறைவாக இருக்கும்போதே தாமதமின்றி ஏதேனும் ஒரு திடமான முடிவை நாங்கள் எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகிவிட்டது.

ஆணயத் தலைவர் சுதாரித்தார். அடக்கப் பட்டிருந்த எரிமலையின் குழம்பு எந்நேரமும் தன் மீது சிதறும் அபாயம் அவரையும் மிரட்டியது. இரண்டாயிரம் ஆண்டு பெண்ணிய அடக்குமுறை அவரிடமும் இருப்பதாய் பெண்கள் தன்னையும் ஒரு வழி ஆக்கிவிடுவார்களே.

உங்கள் கோபம் முற்றிலும் நியாயமானதே. ஆண் வர்க்கத்துக்கு நான் அறிவுறுத்துகிறேன். நீங்கள் சொல்வது போல் அவர்கள் தேவையில்லையென ஒதுக்கி விட்டால் இந்த உலகம் எப்படி இயங்கும்? பணிந்து வந்து சமாதானம் பேசினார்.

காதலும், காமமுமற்ற உலகம் சாத்தியமா? இரு தரப்புக்கும் இது பொதுவல்லவா என்றவரை இடைமறித்த பெண்கள் தரப்பு, எவ்வளவோ புரட்சியாளர்கள் எதை எதையோ இழந்துள்ளனர். எங்கள் இனத்தின் உரிமைக்காக நாங்கள் இவற்றைத் தியாகம் செய்யவும் தயார். அதே சமயம் இது ஆணுக்கான தண்டனையும் கூட.

உலகியல் சுழற்சிக்கு சந்ததிகள் உருவாக வேண்டாமா? என்ற ஆணயத் தலைவரின் குரல் கெஞ்சலாக மாறியிருந்தது.

இவ்வளவு யோசிக்கிற நாங்கள் அதை யோசிக்க மாட்டோமா.தலைமுறை சுழற்சியை நாங்கள் துண்டாட மாட்டோம்.கருப்பை எங்களிடம் உள்ளது.உயிரணுக்கள் தானமாய்ப் பெற்று சந்ததி உருவாக்கலாம் என முதலில் நினைத்தோம். அதற்கும் தானம் தர ஆண்கள் வேண்டுமல்லவா.இந்த ஆண்கள் சகவாசமே வேண்டாம். க்ளோனிங் நகலெடுப்பில், எங்கள் திசுக்களிலிருந்து எங்களையே உருவாக்கம் செய்து சந்ததி வளர்ப்போம் என்ற பெண்களின் குரலில் தெரிந்த தீவிரம் தலைவரின் உடம்பில் ஒரு நடுக்கத்தை உண்டாக்க ஆரம்பித்தது.

வேறு வழியில்லை.இவர்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். இல்லையெனில் இப்புரட்சியாளர்கள் தம் பதவியைப் பறித்து விட்டு, தங்கள் தீர்ப்பை எழுதும் காலம் வந்து விட்ட உண்மையும் அவருக்குத் தெரிந்தே இருந்தது.

இந்த உலகத்திலுள்ள ஆண்களை, தான் உட்பட, என்ன செய்வது? பேனாவால் நெற்றியை தேய்த்துக் கொண்டிருந்த அவர் கண்களில் லாரிகளில் ஏற்றி செல்லப்பட்ட அடிமாடுகளின் முகங்கள் ஆண் முகங்களாய் தெரிந்து அவரை மிரட்டியது. தன்னை உதறிக்கொண்டவரை பெண்கள் தரப்பு கடைசியாய் இன்னும் ஒரு கோரிக்கை... என கவனம் ஈர்த்தது.

நாங்கள் எங்கள் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்கவும், இடையூறின்றி எங்கள் பணிகளில் கவனம் செலுத்தவும் இந்த ஆண்களால் எங்கள் இனத்திற்கு பாலியல் தொல்லை வராமல் இருக்க வேண்டும். எனவே...

முடிக்கும் முன்பே மூர்ச்சையாகியிருந்தார் 01-01- 2100 அன்று இறுதித் தீர்ப்பை வெளியிட வேண்டிய பாஒம மகுதீஆவின் தலைவர்.

கால்கள் கட்டப்பட்டு, சில மனிதர்களின் அழுத்தப்பிடியில், கீழே கிடத்தியிருந்த காளையின் வலிமிகு கதறல் அவர் மண்டைக்குள் மின்னலாய் வெட்டிச் சென்றது.

(957 சொற்கள்)